RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s235

OPEN ACCESS

# கண்ணகி - மென்மையும் வன்மையும்

ர. ரதி [அ, *]

[அ] தமிழ்த்துறை, அரசுக்கல்லூரி சித்தூர், பாலக்காடு-678104, கேரளா, இந்தியா.

# Kannaki softness and hardness

R. Rathi [a, *]

[a] Department of Tamil, Government College, Chittur, Palakkad-678104, Kerala, India

* Corresponding Author: rathi.r1988@gmail.com

Received: 23-03-2021
Revised: 19-01-2022
Accepted: 21-01-2022
Published: 28-02-2022

Check for updates

**ABSTRACT**

The literature has portrayed woman as a symbol of gentleness and a symbol of orderly violence. Realizing such a traditional background, the silappathikaram author Ilangovadikal did not portray Kannaki as a symbol of violence at the beginning of the story. But her efforts to portray her protagonist as a revolutionary woman are remarkable. Thus, his female character 'Kannaki' continues to prove that she is strong in spirit, word and deed through every action. He finally exalts her to divinity. Her ability to portray these functions through her tenderness and harshness is remarkable. This article is being prepared with such orientations in mind.

**Keywords:** Kannaki Softness, Hardness, Ilangovadikal, Silappathikaram.

## முன்னுரை

கண்ணகி தொடர்பான ஆளுமைச் செயல்பாட்டில் அவள் அனைத்து கதாப்பாத்திரங்களாலும் மென்மைத் தன்மை கொண்ட ஒருத்தியாகவே பார்க்கப்படுகிறாள். அவளைப் படைத்த இளங்கோவும் கூட வருணனைகளில் அவளை மென்மைத் தன்மை கொண்டவளாகவே காட்டுகின்றார். இதற்குக் காரணம் என்ன? அக்காலச் சூழலும், இதுவரை பெண்ணுக்காக உருவாக்கி வைத்திருந்த வரையரைகளுமேயாகும். ஆனால் அத்தகைய பண்பாட்டு மரபில் காட்டப்பட்ட ஒரு பெண்ணை திடீரென ஒரு புரட்சிப் பெண்ணாகக் காட்டுதல் என்பது செயற்கைத் தன்மையாகவே இருக்கும். இவ்வுணர்வு நிலைபாட்டின் யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு செயல்பட்டதன் வெளிப்பாட்டு நிலையை இளங்கோவிடம், கண்ணகியின் பாத்திர உருவாக்கத்தில் காண இயலுகின்றது. அதாவது கண்ணகி என்னும் பெண் தனிப்பட்ட நிலையில் உள்ளத்தாலும், சொல்லாலும், செயலாலும் வலிமை கொண்டவள். அவ்வலிமை புகாரில், 'உள்ளச்' செயல்பாடாகவும், மதுரையில் 'சொல்' மற்றும் 'செயல்' வடிவம் கொண்ட செயல்பாடாகவும் வெளிப்படுகிறது. அதாவது அவள் ஆரம்பம் முதலே ஒரு குறிக்கோளை நோக்கி செயல்படுத்தப்படுத்தப்படுகின்றாள். ஆகையால் அவளின் அனைத்து நிலைபாடுகளையும் அத்தகைய தளத்தினின்று புரிந்து கொள்ளுதல் என்பதே சரியானதாக இருக்கும். இந்த அடிப்படையிலேயே கண்ணகியின் வன்மையும் மென்மையும் நோக்கப்படுகின்றது.

## இலக்கியத்தில் ஆண், பெண் கருத்தாக்கங்கள்

இலக்கிய வழக்கிலும் உலகியல் வழக்கிலும் ஆணை வன்மையானவனாகவும் பெண்ணை மென்மையானவளாகவும் பார்த்தல் என்பது இன்றுவரை இருந்து வருகின்றது. இதனை இருபாலருக்கும்

காட்டும் உவமைகள் வாயிலாகவும், செயல்பாடுகள் வாயிலாகவும் நம்மால் அறிந்துக் கொள்ள இயலுகின்றது. அவ்வடிப்படையில் ஒரு பெண்ணின் ஆளுமை தொடர்பான செயல்பாட்டில் அவளைச் சுற்றியுள்ள கதாப்பத்திரங்களும், பிறவும் அவளை மென்மைத் தன்மை கொண்ட ஒருத்தியாகவே பார்க்கின்றன. ஆனால் பெண்ணானவள் உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் பற்பல இன்னல்களைத் தாண்டி வெற்றி நடைபோடும் வல்லன்மை கொண்டவள் என்பதுதான் உண்மையான வெளிபாடு. ஆனால் ஆணுக்கு எதிரான என்னும் தன்மையில்,

“அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த

நிச்சமும் பெண்பாற்கு உரிய”

என்னும் வரையறை பார்க்கப்படுகின்றது (Sanmuam Pillai, 1998). இதற்கு ஆணுக்காக உருவாக்கி வைத்த வரையறையைத் துணைக்கோடுகின்றது. அதாவது,

”பெருமையும் உரனும் ஆடூஉ மேன”

என்று மார்தட்டிக் கொள்கின்றது (Sanmuam Pillai, 1998). ஆனால் இங்கு குறிப்பிடும் செயற்கரிய செயல், அறிவுத் திண்மை என்பவையெல்லாம் எதை அடிப்படையாகக் கொண்டு பார்க்கப்படுகின்றது? என்பதைப் புரிந்து கொள்ளும் போதுதான் ஆண், பெண் என்னும் பேதமையில் ஒவ்வொரு செயல்பாடுகளையும் தரம் பிரித்துப் பார்க்கும் கண்ணோட்டம் என்பது அறவே இல்லாமலாகும். அந்தவகையில் மேலே சொல்லப்பட்ட ஆண், பெண் தொடர்பான பண்புகள் உரிய நேரத்தில் உரிய இடங்களில் பயன்படுத்த வேண்டிய கட்டாயம் இருபாலருக்கும் ஏற்படலாம். இதையே வள்ளுவர்,

“அஞ்சுவது அஞ்சாமை பேதமை; அஞ்சுவது

அஞ்சல் அறிவார் தொழில்”

என்கிறார் (Puliyur Kesikan, 2010). இந்த அடிப்படையிலேயே பிற பண்புகளும் பார்க்கப்படுகின்றன. இவற்றை மனதில் கொண்டு தென்னாட்டின் பத்தினி தெய்வமாக உயர்ச்சி பெற்ற கண்ணகியின் வன்மை, மென்மை செயல்பாடுகள் புகார், மதுரை மற்றும் வஞ்சிமாநகரங்களில் எத்தகைய தன்மையில், எத்தகைய கோணத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது என்பது நோக்குதற்குரியதாக அமைகின்றது.

## புகாரில் கண்ணகியின் நிலைபாடு

பிரெஞ்ச் பெண்ணியவாதி சைமன் -டி- பௌவயார், “பெண் பிறப்பதில்லை உருவாக்கப்படுகிறாள்” என்று கூறியது போல கண்ணகியும் உருவாக்கப்படுகின்றாள். புகார் நகரக் கண்ணகி சமுதாயத்தில் பெண்ணுக்காக கட்டமைக்கப்பட்ட அனைத்துக் கூறுகளையும் உள்வாங்கியவளாகவும், ஆணாதிக்க நிலையில் அடிமைபட்டவளாகவும், சாதாரண நிலையில் அப்பாவியாகவும் விளங்குவது அவளுள் இயல்பாகவே இருக்கும் குணங்களல்ல. மாறாக உருவாக்கப்பட்டவை. இதை சிலப்பதிகாரத்தின் பல்வேறு நிகழ்வுகளும் செயல்பாடுகளும் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

## புற வெளிப்பாட்டில் கண்ணகி

கண்ணகி புறத்தோற்றத்தில் அனைவர் பார்வைக்கும் மென்மையாளவளாகவே தோன்றியிருத்தல் வேண்டும். காரணம், “பூங்கொம்பு போன்றவள், அழகு மிக்கதான வல்லிக்கொடி போன்றவள், செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகள் போன்றவள்; அருந்ததியின் கற்பிற்கு நிகர் இவள் கற்பு” என்று ஊர் மக்கள் இவளைப் போற்றுவது போல் காட்டப்படுவது, அவள் மேல் திணிக்கப்படும் ஆளுமைச் செயல்பாட்டின் ஒரு நிலைப்பாடேயாகும். இங்கு கண்ணகி இப்படிப்பட்டவள் அல்லது இவ்வாறிருக்கக் கடன்பட்டவள் என்ற புறச் செயல்பாட்டு நிலையே மேலோங்கிக் காணப்படுகிறது. ஆகையினால் அத்தகைய செயல்பாட்டை மீற இயலா நிலையிலேயே கண்ணகி இருந்திருக்கின்றாள், விருப்பப்பட்டல்ல என்பதை உணர வேண்டும். மேலும் பெரிய செல்வந்தன் மகள் என்பதால் மிகுந்த

வசதியுடன் வாழ்ந்தவள். வெளியில் எங்கும் நடந்து சென்றோ அல்லது கடினமான வேலைகள் செய்தோ பழக்கமில்லாதவள். ஆகவே அத்தகைய நிலையிலிருக்கும் கண்ணகி, கோவலனுக்கு மென்மைத்தன்மை கொண்டவள் போல் தோன்றியது வியப்பானதொன்றும் அல்ல. ஆகையினால் தான் அவளை இன்ப நிலையில் வருணிக்கும் போதும், துன்ப நிலையில் அவளை எண்ணிக் கவலை கொள்ளும் போதும் அவளது மெல்லியல்புகளே அவனுள் மேலோங்கி நிற்கின்றன. இது பற்றிக் கூறும் போது,

“உள்ளேயே பூட்டி வைச்சிருந்தா காயும்கூட அவிந்து மென்மையான கனியாகி விடுவதில்லையா? அதுபோலத் தான் பெண்ணும், மென்மையாக்கப்பட்டிருக்கிறாள். இது இயற்கையான மென்மை இல்லை. பல்லாயிரம் ஆண்டுகளாகப் பூட்டி வச்சுப் பழுக்க வைத்த மென்மை” (Tamilselvan, 2016).

என்பதையும் நோக்குதல் வேண்டும். ஆனால் அவன் பல இடங்களில் கண்ணகியின் மென்மை குறித்து மட்டுமே பேசுவது அவளது புறவெளிப்பாட்டு நிலையை கருத்தில் கொண்டேயாகும். அதாவது,

” வெயில்நிறம் பெறா மெல்லியல் கொண்டு”

” நறுமலர் மேனி நடுங்குதுயர் எய்த”

” வல்லந கொல்லோ மடந்தைமெல் அடியென”

என்பதுமாக பலவாறு, பல இடங்களில் கூறி வருந்துகிறான் (Sri Chandran, 2001). மட்டுமல்ல கவுந்தியடிகளும்,

“வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள்”

என்பதும் இதையே காட்டுகின்றது (Sri Chandran, 2001). ஆகவேதான் கவுந்தியடிகள் இன்னும் ஒருபடி மேலே சென்று மென்மையான முறையில் மெதுவாக மண்மகளும் அறியாமல் நடக்கும் மெல்லியல் என நினைத்திருக்கிறார். இவ்வாறு கண்ணகி பிறர் வாயிலாக மென்மைத்தன்மை கொண்ட ஒருத்தியாகவே காட்டப்படுகின்றாள்.

## மௌனச் செயல்பாடு

கண்ணகி, கணவன் தன்னை விட்டுப் பிரிந்து சென்றதும், அதை நினைத்து அழுது புலம்பியது போன்றோ, அவனை தன்னோடு அழைத்துக் கொள்வதற்கான ஏதேனும் முயற்சிகள் மேற்கொண்டது போன்றதோ ஆன எவ்வித குறிப்புகளும் காப்பியத்தில் இல்லை. இதுமட்டுமல்லாது அவன் வரும்வரை அவனுக்காக காத்திருந்ததும், அவன் பெயரால் அனைத்து பொருள்களையும் இழக்க நேர்ந்த போதும் தளராமல் தனித்து நின்று அதை எதிர்கொண்டதும், அவளது உள்ள உறுதியையே காட்டுகின்றன. அதே போல கோவலன் பொருளீட்டுவதற்காக இரவோடு இரவாக மதுரை செல்லக் கருதி” நீயும் என்னுடன் புறப்படுவாயாக” என்றதும் உடனே அவனோடு சென்ற கண்ணகியின் உறுதிப்பாடு அவளது ’உள்ள’ வலிமையையே காட்டுகின்றது. மேலும் வழிப்பயணத்தில் பருக்கைக் கற்கள் கால்களை வருத்திய போதும், சோர்வேற்பட்ட போதும் எதையும் வெளிப்படுத்தாமல் தனது கொள்கை ஒன்றையே மனதில் கொண்டு வலிமையுடன் செயல்பட்டவள் கண்ணகி. எனவே தான் கவுந்தியடிகள்,

“குன்றாக் கொள்கைக் கோவலன் தன்னுடன்”

என்கிறார் (Sri Chandran, 2001). அதேபோல கோவலன் அனைத்தையும் இழந்து வந்த போதும் அவள் அவனோடு ஒரு சிறு ஊடல் கூட கொள்ளவில்லை. சாதரண நிலையில் எந்த பெண்ணாக இருந்தாலும் ஊடல் கொண்டிருந்திருப்பாள். ஏன் சங்க இலக்கியங்களிலே கூட பரத்தையிடம் சென்று வந்த கணவனை பெண்கள் உடனே ஏற்பதில்லை. ஆனால் கண்ணகி, கணிகையிடம் (பொதுவாக மாதவி கணிகை குலத்தினள் என்பதனால், கதையோட்டத்தில் அவள் அனைவராலும் தவறான கண்ணோட்டத்தில் பார்க்கப்பட்டதைக் கருத்தில் கொண்டு) தன் கணவன் இருப்பதற்கு வேண்டிய போதெல்லாம் பொருள் கொடுத்தும், அனைத்தையும் இழந்து வந்த அவனிடம் சிறிதும் முகம்

சுழிக்காமல் அவனை ஏற்றுக் கொண்டும், தன்னிடம் மீதமுள்ள பொருளை அவனுக்குக் கொடுத்து உதவக்கூடியதுமான மனோப் பக்குவம் சாதாரணப் பெண்ணுக்கு நிச்சயம் வாய்க்கப் பெறாது. அது உள்ள உறுதி கொண்ட வலிமை மிக்க பெண்ணால் மட்டுமே ஆற்றத்தக்க செயற்கரிய செயலாகும். இவ்வாறு மறைமுகமாகக் காட்டப்பட்ட அவளது வலிமை தெய்வமேறப் பெற்ற சாலினியால்,

"இவளோ, கொங்கச் செல்வி குடமலையாட்டி

தென்தமிழ்ப் பாவை செய்தவக் கொழுந்து

ஒரு மாமணியாய் உலகிற்கு ஓங்கிய

திருமாமணி"

என்று வெளிக்காட்டப்படுகின்றது (Sri Chandran,2001). இங்கு கண்ணகியைப் போற்றித் துதித்ததும், அப்புகழ்ச்சிக்கு நாணி அவள் கணவன் பின் சென்று ஒடுங்கி, புதியதொரு புன்னகை செய்ததும் அவளது மென்மையையே காட்டுகின்றது என்ற கருத்தாக்கங்கள் நிலவுகின்றன. ஒருவேளை அது அவளது தன்னடக்கமாகக் கூட இருக்கலாம். காரணம் இவள்" தென்தமிழ் நாட்டின் பத்தினியாக உயரக் கூடியவள், உலகிற்கெல்லாம் மிக்க ஒளியைத் தரும் தெய்வமகள்" என்ற கருத்தாக்கங்கள் அவள் சாதாரண மெல்லியல்புடைய பெண்ணல்ல என்பதைக் காட்டி நிற்கின்றன. மட்டுமல்ல அவள் தெய்வமேறப் பெற்ற சாலினியாலே புகழப்பட்டதனால், அவள் தெய்வத்தாலேயே போற்றப்படும் தெய்வக் கற்பினள் என்பதும் பெறப்படுகின்றது. ஆகவே அத்தகைய வல்லன்மை கொண்ட மாபெறும் பத்தினிப் பெண் என்னும் பான்மையிலேயே அவள் பார்க்கப்பட வேண்டியவளாகின்றாள்.

## கண்ணகியின் உள்ளச்செயல்பாடு

கண்ணகி வன்மைத் தன்மை மேலோங்கியவளாகவே காட்டப்பட்டாலும், அவளுள்ளும் ஒரு பெண்ணிற்குண்டான பெண்மை, நளினம், தாய்மை, கருணை, தியாகம் என்பவை இல்லாமலில்லை. கணவன் தன்னைவிட்டு நீங்கியதும் அலங்காரம் ஏதும் இன்றி இருத்தல் என்பது அன்றைய ஒரு முறை என்றாலும் கூட, அவனுக்காக வருந்தி செயலற்று இருந்தது அவளது மெல்லியல்பையே காட்டுகின்றது. ஆனால் அவன் வருவதுற்குண்டான எவ்வித செயல்பாடுகளும் செய்யாமல் 'வருவான்' என்னும் நம்பிக்கையில் காத்திருந்தது அவளது வலிமையின் வெளிப்பாடு. வழிப்பயணத்தில் வம்பப்பரத்தையும் வருமொழியாளனும் கவுந்தியடிகளிடம்," இவர்கள் யார்?" என வினவ, கவுந்தியடிகளோ," இவர்கள் என் மக்கள்" என்றுரைக்க, அதற்கு அவர்களோ," ஒரு வயிற்றில் பிறந்தோர் கணவனும் மனைவியுமாகக் கூடி வாழ்க்கை நடத்துதல் உண்டோ?" எனக் கேட்கின்றனர். இதைக் கேட்ட கண்ணகி தன் இரு செவிகளையும் பொத்திக் கொண்டு கணவன் முன் நடுங்கி நிற்கிறாள். இவ்விடத்தில் கண்ணகி நடைமுறைக்கு மீறிய தகாத ஒரு சொல்லையும் தாங்கமாட்டாத மெல்லியல்பினள். ஆனால் அவர்கள் செய்த தவற்றிற்குத் தண்டனை வழங்கிய கவுந்தியடிகளிடம், "ஒழுக்கத்தினின்றும் நீங்கியோர் நீர்மை அல்லாத தீய மொழிகளைக் கூறினாலும், அது அவர்களது அறியாமை என்று அறிதல் வெண்டும்" என்று நேரடியாகக் கூறுதல் அவளது வன்மையையே காட்டுகின்றது. ஆயினும் அவர்களுக்கு சாப விலக்கு கேட்டது அவளது மெல்லியல்பேயாகும்.

பயணத்தின் போது களைத்து மூச்செறியக் காணப்பட்ட கண்ணகி," மதுரை என்னும் பழைய ஊர்தான் எதுவோ?" என வினவுவது அவளது மடம் எனக் குறிப்பிடுவதும் உண்டு. அதாவது அறிந்து கொண்டேதான் அவள் அறியாதவள் போல் வினவினாள் என்னும் தன்மையில் விளக்கப்படுகின்றது. காரணம் ஒரு காத தூரம் வந்ததும் மதுரை வந்துவிடாது என்பதை கண்ணகி நிச்சயம் அறிந்தவளே. ஆயினும் அவள் அவ்வாறு கேட்டது 'தாம் குற்றமிழைத்துவிட்டோம்' என்னும் பான்மையில் எதுவும் பேச இயலா நிலையில் குற்றவுணர்வோடு வரும் கணவனின் எண்ணப் போக்கை மாற்றுவதற்காக இருக்கலாம் அல்லது வந்ததும் தன்னுடன் எதுவும் பேச இயலா நிலையில் தன்னை அழைத்து வந்த கணவனிடம் ஏதேனும் பேச வேண்டும் என்ற நிலையில் பேச்சை இவ்வாறு தொடங்கியிருக்கலாம். ஆனால்,

"இறுங்கொடி நுசுப்போடு இனைந்தடி வருந்தி
நறும்பல் கூந்தல் குறும்பல உயிர்த்து
முதிராக் கிளவியின் முள்ளெயிறு இலங்க
மதுரை மூதூர் யாதென வினவ"

என்னும் வரிகளில் அவள் தன்னுடைய சோர்வினால் வருந்தி அவ்வாறு கேட்பது போல் காட்டப்பட்டிருக்கின்றது (Sri Chandran, 2001). இது செல்வச் செழிப்பில் வளர்ந்த ஒரு சாதாரணப் பெண்ணின் நிலை மேலோட்டமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

ஆனால் கண்ணகி ஒன்றும் சாதாரணப் பெண் அல்ல. உள்ளத்தில் உறுதியும், சொல் வன்மையும், செயல் வன்மையும் கொண்ட புரட்சிப் பெண் அல்லது அவ்வாறு மாற இருப்பவள். ஆகவே அவளை இனியும் மழலை மொழி பேசும் சிறு பிள்ளை என்னும் பான்மையில் அவளது மொழிகளை எடுத்துக் கொள்ளுதல் என்பது சரியானதாக இருக்காது.

காரணம் புகாரில் இருக்கும் போதே அவளது வலிமை பல இடங்களில் வெளிப்படுகின்றது. அதாவது தேவந்தி கண்ணகியிடம், "சோம குண்டம், சூரிய குண்டம் ஆகிய புண்ணிய தீர்த்தங்களின் துறைகளிலே மூழ்கி, காமவேள் கோட்டம் சென்று காம தேவனைத் தொழும் மகளிர், இம்மையில் தன் கணவருடன் கூடி பிரியா வாழ்வு வாழ்ந்து இன்புறுவர்" என்று கூறி, "நாமும் ஒரு நாள் அவற்றில் சென்று நீராடுவோம்" என்று கூறியதற்கு சாதாரணப் பெண்ணாக இருந்திருந்தால், எவ்வாரேயினும் தன் கணவனைப் பெற வேண்டும் என்ற ஆதங்கத்தில் இசைந்திருப்பாள். ஆனால் கண்ணகி, "அங்ஙனம் துறை மூழ்கித் தெய்வம் தொழுதல் எங்கள் இயல்பன்று!" என்று கூறி மறுத்து விடுகின்றாள். இது அவள் சமயம் சார்ந்த விஷயங்களை எவ்வளவு தூரம் அறிந்திருக்கிறாள் என்பதையும், அதில் எத்தகைய உறுதிப்பாட்டோடு இருந்துள்ளாள் என்பதையும் உணர வைக்கின்றது. ஆகவே கண்ணகி 'உள்ள' அளவில் மிகுந்த உறுதிப்பாடுடையவள். அதுவே அவளை மதுரையை எரிக்கும் அளவிற்கு கொண்டு செல்கின்றது. ஆயினும் ஆங்காங்கு அவளது மெல்லியல்பு வெளிப்பட்டாலும், அது அவளது வன்மையை நோக்கிய நகர்வில் காணாமல் போகின்றது. ஆகவே தான் கண்ணகியைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் அவளது வன்மையே முன் நிற்கின்றது. ஆயினும் அவளது மென்மை செயல்பாடுகளை ஒதுக்கிச் சென்றுவிட இயலாது. அதுவும் அவளுள் இயல்பாகவே இருந்திருக்கின்றது. அது எவ்வாறு வன்மையாக்கத்திற்கு உள்ளாகின்றது என்பது நோக்கத்தக்கதாகும்.

## வன்மையை நோக்கிய நகர்வு

கண்ணகி புகாரில் இருக்கும் போது ஒரு கனவு கண்டதாக தேவந்தியிடம் கூறி வருந்துகின்றாள். அதாவது," நேற்று இரவு என் கணவன் கனவிலே வந்து இரு கைப்பற்றி அழைத்துப் போக, ஒரு பெரிய நகரில் புகுந்தோம். அந்நகரிலே வாழும் மக்கள் இடு தேளைப் பிடித்து எங்கள் மீது போடுவது போல, ஏலாத ஒரு பழிச் சொல்லை எங்கள் மீது இட்டனர். அப்பழி மொழியால், கோவலனுக்குத் தீங்கு நேர்ந்தது என்று பிறர் சொல்லக் கேட்ட யான், அரசன் முன் சென்று வழக்குரைத்தேன். அதனால் அவ்வரசனோடு அவ்வூர்க்கும் தீங்கு நேர்ந்தது" என்று கூறிப் புலம்புதல் என்பது அவளது மென்மையையே காட்டுகின்றது.

மாதரியின் வீட்டில் கோவலனுக்கு உணவளிக்க அவனது கால்களைத் தனது தாமரை மலர் போன்ற கைகளால் கழுவித்துடைத்து வணங்கி, அழகாக செய்யப்பெற்ற தடுக்கையிட்டு, குலை ஈனாத வாழையின் குருத்தை மெழுகிய இடத்தின் மேல் பரப்பி, "அடிகளே, இப்போது உணவை உண்பீராக!" என்று அன்பாக அழைத்தது அவளது மென்மைத்தன்மையையே காட்டுகின்றது.

அதே போல மதுரைக்கு சென்ற தன் கணவன் இன்னும் வரவில்லையே என ஐயையிடம் புலம்பித்துடிப்பது அவளது மெல்லியல்பையே காட்டுகின்றது. அதாவது, "தோழீ! மதுரைக்குச் சென்ற காதலன் இன்னும் வரக்காணேன்! அதனால் என் நெஞ்சு கலங்கித் துன்புறுகின்றது! மூச்சும் கொல்லன் ஊதும் துருத்தியும் தோல்வியுறுமாறு அழல் எழ உயிர்க்கின்றது! நல்ல பகற் பொழுதிலேயே நடுங்கச்

செய்யும் துன்பம் மிகுதியாயிற்று. அதுவுமன்றி, என் கணவனைக் காணாது உள்ளம் பெரிதும் வருந்துகின்றது. என் தலைவனுக்கு யாரோ வஞ்சகம் செய்து விட்டார்கள் என்றே என் நெஞ்சம் மயங்குகிறது" என்று பலவாறாகப் புலம்புவது அவளது மெல்லியல்பையே காட்டுகின்றது.

கோவலன் பாண்டிமாதேவியின் சிலம்பைக் கவர்ந்த கள்வன் எனக் கூறி அவனைக் கொல்வதற்கு நாள் குறித்தனர் என்பது போன்று ஐயையால் கூறக் கேட்ட கண்ணகி, நிலத்திலே விழுந்து கண்கள் சிவக்க அழுகிறாள். மேலும் தன் கணவனை நினைந்து, "எங்கிருக்கின்றீர்! எங்கிருக்கின்றீர்!" எனக் கதறி அழுவது அவளது மெல்லியல்பையே காட்டுகின்றது.

கணவன் இறந்து கிடப்பதைக் கண்டு," எனக்குத் துணையாக யாருமில்லாத மயக்கம் தரும் இம்மாலைக் காலத்தே, துயருறுகின்ற தனியளான என் கண் முன், மாலைகள் நிறைந்த நினது அழகு மார்பு இப்படி வெறும் நிலத்தே படிந்து கிடக்கத்தக்கதோ?" என துயருற்று அழுவதும் அவளது மெல்லியல்பையே காட்டுகின்றன.

கணவனைக் கள்வனெனக் குற்றம் சுமத்திக் கொலை செய்துவிட்டனரே என்ற ஆதங்கத்தில் அவள் தன் இடக் கொங்கையைத் தன் வலக் கையால் திருகி மதுரையின் மீது எரிந்து தீக்கிறையாக்க நினைத்தது அவளது வல்லன்மையைக் காட்டுகின்றது. ஆனால் கண்ணகி முன் தோன்றிய அக்னி தேவன், "தீயினின்று பிழைத்தற்குரியோர் யார் யார்?" என வினவும் போது கண்ணகி, "பார்ப்பார், அறவோர், பசு, பத்தினிப்பெண்டிர், மூத்தோர், குழந்தைகள்" என்பவரைச் சுட்டுதல் அவள் தன் அற நெஞ்சினைப் புலப்படுத்துகின்றது. மேலும் இது அவளுள் இருக்கும் வன்மையில் மென்மையைத் தேடச் செய்கின்றது.

ஆகவே அனைத்துயிர்களும் பிறப்பால் மென்மைத் தன்மை கொண்டவையே. ஆனால் அவை வன்மை கொண்டவையாக மாறுவதற்குச் சமுதாயக் கட்டுப்பாட்டு விதிகளும், அதை உருவாக்கி வைத்த மனிதர்களும், அதை வரம்பின்றி சிந்திக்காமல் செயல்படும் மனிதர்களாலுமேதான் அது கேள்விக்குள்ளாக்கப்பட்டு, அதுவே வன்மைச் செயல்பாடாக வெளிப்படுகிறது என்பதைக் கண்ணகியின் செயல்பாடுகள் வாயிலாக வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

## கண்ணகியின் வன்மை

கண்ணகியின் கதாப்பாத்திர உருவாக்கம் என்பது தனிப்பட்ட நிலையில் ஒரு குறிக்கோளை நோக்கி உருவாக்கப்பட்டது. அது கற்பு என்னும் பின்னணியில் உருவாக்கப்பட்டாலும், அதிலும் அவளது உறுதியின் வலிமையே வெளிப்படுகின்றது. அதாவது தனது கற்பின் திண்மையாலேயே தன் கணவனுடன் இணைந்துவிட இயலும் என்ற உறுதிப்பாடே அவளை தேவந்தியிடம் "பீடன்று" என்று கூற வைக்கின்றது. பல ஆண்டுகளாகப் பிரிந்து இருந்த தன் கணவன் தன் முன் வந்து நின்ற போதும், தன் தவற்றை உணர்ந்து கலங்கிய போதும் சிறிதும் அசராமல் ஒரு சிறு முறுவலுடன், "சிலம்புகள் உள்ளன; அவற்றைக் கொள்மின்" என்கிறாள். இது ஒரு சாதாரணப் பெண்ணால் இதை நிச்சயம் செய்ய இயலாது. ஆகவே கண்ணகி என்பாள் ஒரு சாதாரணப் பெண்ணல்ல என்பதையே இந்நிகழ்வுகள் நமக்குக் காட்டுகின்றன.

ஆகவேதான் தன் கணவன் 'புறப்படு' என்றதும் எதையும் யோசிக்காமல் அவனுடன் புறப்பட்டுவிடுகின்றாள். அதாவது அவனில்லாத இன்னலையே அவளால் தாங்கிக் கொள்ள இயலும் என்னும் போது, அவனோடு இருக்கும் போது ஏற்படக் கூடிய இன்னல், தன்னை என்ன செய்துவிடப் போகிறது? என்ற உறுதிப்பாடாகக் கூட இருக்கலாம். கண்ணகி அதிகமாகப் பேசாதவளாகவே புகாரில் காட்டப்படுகின்றாள். அந்த ஒரு நிலையின் தாக்கமே மதுரை செல்லும் போதும், அங்கு தங்கி இருக்கும் போதும் அவளுள் ஏற்பட்டிருக்க வேண்டும். மற்றபடி" பேசாமடந்தை" என்பது போன்ற கருத்துருவாக்கம் அவள் மேல் செயற்கையாகத் திணிக்கப்பட்டது. அதை உறுதி செய்வது போல் மாதரி வீட்டில் கோவலனுக்கு உணவு படைக்கும் போது கோவலனின் புலம்பலுக்கு கண்ணகியின் பதில் அதை வெளிப்படுத்துகின்றது. அதாவது அது ஒரு நீண்ட உரையாக சுமார் பதின்மூன்று வரிகளில் வெளிப்படுகின்றது. இங்கு கூட அவள்,

"அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்

துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்

விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை"

என்பது போல்தான் பேசுகின்றாள் (Sri Chandran, 2001). இங்கு சாதாரண ஒரு பெண்ணின் பேச்சில் தென்படும் எவ்வித சாயலையும் கண்ணகியின் பேச்சில் எதிர்பார்க்க இயலாது. காரணம் பிற பெண்களினின்றும் அவள் விதிவிலக்கானவள். ஆகவேதான் தெய்வமேறப்பெற்ற சாலினி வாயிலாக அவளைக் "கொங்கச் செல்வி, குடமலையாட்டி, தென்தமிழ்ப் பாவை" என்பது போல் கூறவைப்பது தெய்வம் போற்றும் தெய்வீகப் பெண் என்று காட்டுவதற்கேயாகும். அதுபோல கவுந்தியடிகள் வாயிலாகக்,

"கற்புக் கடம்பூண்ட இத்தெய்வ மல்லது

பொற்புடைத் தெய்வம் யாம்கண்டி லமால்"

என்று கூற வைப்பதும் இந்தப் பின்னணியிலேயாகும் (Sri Chandran, 2001). அதேபோல வாயிற்காவலன் மன்னன் முன் சென்று கண்ணகியின் வருகையை அறிவிப்பதற்காகக் கூறப்படும் ஒரு நீண்ட வருணனையும் இப்பின்னணியிலேயே இயக்கப்பட்டதாகும். அதாவது,

"அடர்த்தெழு குருதி அடங்காப் பசுந்துணிப்

பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி

............ சிலம்பொன் றேந்திய கையள்

என்பதாகும் (Sri Chandran, 2001). இவ்வாறான பிம்பங்கள் கண்ணகியை வன்மைத் தன்மை கொண்ட ஒருத்தியாகக் காட்டுவதற்குண்டான தொடர் செயல்பாடுகள் என்பதையே இவை காட்டுகிறன.

ஆகவேதான் கண்ணகி "போற்றா ஒழுக்கம் புரிந்தீர்" என்பதை தனக்காக அல்லாமல் தன்னைச் சுற்றியுள்ளோருக்காகவும், சமூக அக்கறை மேலீட்டாலுமே, அதைச் செய்யத் தடையாக இருந்த கோவலனை இடித்துரைப்பது போல் சொல்கின்றாள். இதுவும் அவளது வன்மைச் செயல்பாடுகளில் ஒன்றாகவே பார்க்கப்படுகின்றது. இச்செயல்பாடு கண்ணகியைப் பிறரினின்று வேறுபடுத்திக் காட்டவும் செய்கின்றது. இவ்வாறு கண்ணகியை நோக்கிய அனைத்து செயல்பாடுகளும் அவளை மதுரையை எரிப்பதற்கு ஆயத்தம் செய்யக் கூடியவையாகவே நகர்த்தப்பட்டிருக்கின்றன.

## வன்மையின் உச்சம்

கண்ணகியிடம் ஐயை, "அரசன் உறையும் அரண்மனையிலிருந்த, அழகு பொருந்திய சிலம்பினைச் சிறிதும் சத்தம் இல்லாமல் கவர்ந்த கள்வன் என்று கூறி, உன் கணவனைக் கொலைக் குறித்தனர்" என்கிறாள். இது கேட்டு முதலில் அழுது புலம்பும் கண்ணகி பின்னர் வலிமையடைகிறாள். அவ்வலிமையின் வெளிப்பாடே பலவாறாக அவளது புலம்பலில் வெளிப்படுகின்றது. அதாவது,

"தம்முடன் இன்புற்ற தம் கணவர் இடர் செய்யும் தீயிலே மூழ்கவும், அவரோடு தாமும் தீயில் மூழ்காது, துன்புறுத்தும் கைம்மை நோன்பினை மேற்க்கொண்டு துயருறும் மகளிரைப் போல, மக்களெல்லாம் பழிதூற்றுமாறு பாண்டியன் தவறு செய்ய, அதனால் கணவனை இழந்தயான் அவலம் கொண்டு அழுது அழிவனோ?

மணம் மிக்க அகன்ற மார்பினை உடைய தம் கணவரை இழந்ததால் ஏக்கமுற்று, பல நீர்த்துறைகளில் நீராடி இடருற்று அழும் மகளிரைப் போல, பாவத்தினைப் பின்பற்றிச் செல்லும் கொடுங்கோலனாகிய பாண்டியன் என் கணவனுக்குத் தவறிழைப்ப, அறக்கடவுள் எனப்படும் அறிவற்றவனே! யான் அவலம் கொண்டு அழுது அழிவனோ?" என்று கேட்டு அழுகின்றாள். இங்கு அவள் முன் வைக்கும் கேள்விகள்:

தவறிழைக்காத தன் கணவன் தண்டனைக்குள்ளானது மட்டுமல்லாது நான் ஏன் கைம்மை மேற்கொள்ள வேண்டும்?

தவறிழைத்தவன் வெறுமனே இருக்க நான் ஏன் அவலம் கொண்டு அழிய வேண்டும்?

பாண்டியன் தன் கணவனுக்குக் கொடுமை இழைக்கும் போது அறக்கடவுள் அறிவற்றவனாக இருந்ததற்கு தான் ஏன் தண்டனை அனுபவிக்க வேண்டும்?

என்பது போன்று கேட்கும் திறம் வலிமை கொண்ட கண்ணகிக்கன்றி வேறு யாருக்கு வரும்? மட்டுமல்ல நாட்டின் அரசனையே கேள்விக்குள்ளாக்கும் வல்லமை எத்தனை பெண்களுக்கு வரும்? அது போலக் கடவுளையே ஏசும் வன்மை, சமுதாயத்தில் பெண்களுக்காக உருவாக்கி வைத்த கற்புச் செயல்பாடுகளைக் கேள்விக்குள்ளாக்கி, அதை மீறும் வல்லமை போன்றவை எத்தனை பெண்களுக்கு இருக்கிறது? இவை அனைத்திலும் கண்ணகியின் தைரியமும், உறுதிப்பாடும், வன்மையுமே வெளிப்பட்டு நிற்கின்றது.

வாய் திறந்து பேசாத ஒரு நங்கை வீதி நெடுகிலும், தன் கணவனுக்கு இழைத்த கொடுமையைச் சொல்லி, "இம்மதுரையில் மகளிரும் உள்ளாரோ? சான்றோரும் உள்ளாரோ? தெய்வமும் உள்ளதோ?" என அனைவரையும் கேள்விக்குள்ளாக்குகின்றாள். அதாவது தவறிழைக்காத கணவனைத் தண்டனைக்குள்ளாக்கும் போது அதனைப் பொறுத்துக் கொள்ளும் பெண்களும், சான்றோரும், தெய்வமும் உள்ளனரோ? எனக் கேட்பது தன்னுடைய இச் செயலுக்கு யாரும் பழி சொல்ல இயலாது என்பதாகும். அதாவது தன்னுடைய இச்செயல் நியாயமானது என்பதாகவும் இதற்கு நீதி கிடைக்க வேண்டும் என்ற உள்ளக் குமுறலின் வெளிப்பாடாகவும் இது வெளிப்படுகின்றது.

அதுமட்டுமல்ல, "தீச்செயல் புரிந்த பாண்டிய மன்னனைக் கண்டு இக்கொலைத் திறத்திற்குரிய காரணம் என்னவென்று கேட்பேன்" என எழுந்து, மன்னன் முன் சென்று, "தேரா மன்னா" என அவள் விளித்தழைத்ததுவே அவளது வன்மையின் உச்சத்தைக் காட்டுகின்றது. மேலும் அவளது வழக்காடும் வன்மை, பாண்டிய மன்னனை நிலைகுலையச் செய்ததோடு மட்டுமல்லாமல், அவனைத் தரையில் வீழ்ந்து மாண்டு போகவும் செய்கின்றது. பாண்டியனது மனைவி கோப்பெருந்தேவியின் உயிரையும் குடிக்கின்றது. அதோடு மட்டும் நில்லாமல் மதுரையை எரிக்கவும் ஆயத்தம் கொள்கின்றது. அதுவே அவளது இடப்பக்கத்துக் கொங்கையை தனது வலக்கையினால் திருகி எடுத்து, அதை மதுரையின் மீது வீசச் செய்து நகரைத் தீக்கிரையாக்கவும் செய்கின்றது. ஆயினும் அவளது இவ்வன்மைச் செயல் நியாயமானது என்பதை அவர்கள் (Muthumohan, 2012),

"நூலின் பிற்பகுதியில் கண்ணகி ஒரு மீறலின் பிரதிநிதியாகவும், தீவிரச்செயலின் பிரதிநிதியாகவும் விளங்குகிறாள். அவள் செயல் ஒரு சுத்தீகரிக்கும் வன்முறைச்செயலாகும். கண்ணகியின் வன்முறை, அரசும் சமுதாயமும் நடத்தும் அமைப்பு ரீதியான வன்முறைகளைப்பற்றிச் சிந்திக்கச் செய்கிறது" (Muthumohan, 2012).

என்று சமுதாய நோக்கு நிலையில் கூறுகின்றார். இதையேக் கண்ணகியும்,

"யானமர் காதலன் தன்னைத் தவறுஇழைத்த

கோநகர் சீறினேன் குற்றமிலேன் யானென்று"

கூறுவதினின்று அறிய இயலுகின்றது (Sri Chandran, 2001). இங்கு தனியொருத்தியாய் இத்தனை செயல்பாடுகளையும் நிகழ்த்திக் காட்டிய அவளது வல்லன்மையின் வீரியம் இவ்வளவினது என்று அளவிட்டுச் சொல்லும் எல்லையையும் கடந்து விட்டது என்பதை உணர இயலுகின்றது.

## வஞ்சியில் கண்ணகி

மதுரையினின்று நீங்கிய கண்ணகி தனியலாய் இரவென்றும் பகலென்றும் பாராமல் வையையின் ஒரு கரையில் சென்று நிற்கின்றாள். மீண்டும் அங்கிருந்து மேடு, பள்ளம் என்று எதையும் பாராமல் நடந்து செல்கின்றாள். இறுதியாக ஒரு குன்றின்கண் சென்று நிற்கின்றாள். பிறகு பதினான்கு

நாட்களுக்குப் பிறகு கணவனோடு வானுலகு அடைந்ததாகக் கூறப்படுகின்றாள். இதுவும் 'தம் கணவனை எவ்வாறேனும் அடைவேன்' என்று செயல்பட்ட அவளது 'உள்ள' உறுதியையே காட்டுகின்றது.

இவ்வாறு பலவிதமான உறுதிப்பாட்டோடு செயல்பட்ட வல்லன்மை கொண்ட அவள், வீர மங்கையாக, வீரப் பத்தினியாக சிலைவடிவம் பெற்று, இன்று தென்னகம் போற்றுமளவிற்கு உயர்ந்து காணப்படுவது, அவளுள் மேலோங்கி நின்ற வன்மையினாலேயேயாகும். அதுவே அவளை இன்றளவும் தெய்வ நிலையில் வைத்து வழிபடவும் வைத்திருக்கின்றது என்பதை, இன்று வழிபாட்டுக்காக வைத்திருக்கின்ற சிலைகளும், வழிபாட்டு முறைகளுமே அதைக் கூறுகின்றது.

## முடிவுரை

கண்ணகி என்னும் காப்பிய நங்கை சாதாரணப் பெண்களினின்றும் தனித்துவமுடையவளாய் ஒரு மாறுபட்ட தன்மையில் காப்பியத்தில் வலம் வருகின்றாள். அவள் இதற்கு முன்பு கண்டு வந்த சங்ககாலப் பெண்ணுமல்ல. இன்று நாம் காணுகின்ற சுயநல நோக்கில் சிந்திக்கும் பெண்ணுமல்ல. ஆனால் மேலோட்டமான நிலையில் நின்று பார்க்கும் போது அவள் கணவனுக்காக மதுரையை எரித்தது போன்ற ஒரு பிம்பம் தோன்றலாம். ஆனால் கண்ணகி என்னும் கதாப்பாத்திரத்தினுடே ஆரம்பம் முதல் பயணித்தவர்களுக்கு இதனின்று வேறான ஒரு எண்ண போக்கு தோன்றுவதற்கே வாய்ப்புள்ளது. காரணம் அறக்கடமைகளை ஆற்ற இயலாமல் போனதற்காகவே முதன் முறையாகக் கோவலனைக் கடிகின்றாள். அது போல மன்னன் என்ற அதிகாரத்தில் அமர்ந்து கொண்டு அகங்காரமாக மேற்கொள்ளும் வன்முறை செயல்பாட்டிற்கு வன்முறையாலேயே முற்றுப் புள்ளி வைக்கின்றாள். தவறிழைத்தவர்கள் தண்டனைக்குள்ளாதல் வேண்டும் என்ற நியாயமான வெளிப்பாடு கூட வன்மமான முறையில் சொல்ல வேண்டிய கட்டாயத்தில் அக்காலச் சூழல் இருந்ததையும் அவளே எடுத்துக் காட்டுகிறாள். இவற்றினின்று கண்ணகி வன்மை மட்டுமே கொண்டவள் என்றும் கூறிவிட இயலாது. அவளுள் மென்மையும் உள்ளது. அதைக் காப்பியத்தில் காணப்படும் சில நிகழ்வுகள் மூலம் ஆங்காங்கே எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன. ஆயினும் காப்பியச் சூழலும், குறிக்கோளும் அவளை வன்மையை நோக்கியே நகர்த்திச் சென்றிருக்கின்றது. இதனின்று பார்க்கும் போது கண்ணகியுள் வன்மை, மென்மை என்பதான இரு மாறுபட்ட பண்புக்கூறுகள் காணப்பட்டாலும் அதில் வன்மையே மேலோங்கிக் காணப்படுகின்றது என்பதே உறுதி செய்யப்படுகின்றது.

## References


Muthumohan, N., (2012) Kappiyapenkal Maruparvai, Muthumohan, Madurai, India.

Puliyur Kesikan, (2010) Thirukkural, Poombukar Publications, Chennai, India.

Sanmuam Pillai, M., (1998) Tholkappiyam porulathikaram, Paari Nilayam, Chennai, India.

Sri Chandran, J., (2001) Ilankovadikal Silappathikaara moolamum thelivuraiyum, Varthamanan Publications, Chennai, India.

Tamilselvan, S., (2016) Penmai entroru Karpitham, Bharathi Puththakalayam, Chennai, India.


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License